ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ருதி₃ ॥

ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ நாச்சியார் திருமொழி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to **Smt. Vasundara Ramarajan** for proofreading this document.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| ⋆ | நாச்சியார் திருமொழித் தனியன்கள் | 5 |
| 1 | தையொரு திங்கள் | 7 |
| 2 | நாமமாயிரம் | 11 |
| 3 | கோழியழைப்பதன் | 15 |
| 4 | தெள்ளியார் பலர் | 19 |
| 5 | மன்னு பெரும்புகழ் | 21 |
| 6 | வாரணமாயிரம் | 25 |
| 7 | கருப்பூரம் நாறுமோ | 27 |
| 8 | விண்ணீல மேலாப்பு | 29 |
| 9 | சிந்துரச் செம்பொடி | 31 |
| 10 | கார்க்கோடல் பூக்காள் | 33 |
| 11 | தாமுகக்கும் | 35 |
| 12 | மற்றிருந்தீர் | 37 |
| 13 | கண்ணனென்னும் | 41 |
| 14 | பட்டி மேய்ந்து | 45 |

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ நாச்சியார் திருமொழித் தனியன்கள் ॥

திருக்கண்ணமங்கையாண்டான் அருளிச்செய்த

அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன் துணைவி*
மல்லிநாடாண்ட மடமயில்* மெல்லியலாள்
ஆயர் குலவேந்தன் ஆகத்தாள்* தென் புதுவை
வேயர் பயந்த விளக்கு

கோலச் சுரிசங்கை மாயன் செவ் வாயின் குணம்வினவும்
சீலத் தனள் தென் திருமல்லி நாடி செழுங்குழல் மேல்
மாலைத் தொடைதென் அரங்கருக்கீயும் மதிப்புடைய
சோலைக் கிளி அவள் தூயநற் பாதம் துணைநமக்கே

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ தையொரு திங்கள் ॥

## "கண்ணனை இணக்கு" எனக் காமனைத் தொழுதல்

‡தையொரு திங்களும் தரை விளக்கித்⋆
    தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள்⋆
ஐய நுண் மணல் கொண்டு தெருவணிந்து⋆
    அழகினுக்கலங்கரித்தனங்கதேவா!⋆
உய்யவும் ஆங்கொலோ என்று சொல்லி⋆
    உன்னையும் உம்பியையும் தொழுதேன்⋆
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை⋆
    வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே (1)

வெள்ளை நுண் மணல்கொண்டு தெருவணிந்து⋆
    வெள்வரைப் பதன் முன்னம் துறை படிந்து⋆
முள்ளும் இல்லாச் சுள்ளி எரி மடுத்து⋆
    முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா⋆
கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக்கொண்டு⋆
    கடல் வண்ணன் என்பதோர் பேர் எழுதி⋆
புள்ளினை வாய் பிளந்தான் என்பதோர்⋆
    இலக்கினில் புக என்னை எய்கிற்றியே (2)

மத்த நன் நறுமலர் முருக்க மலர்
    கொண்டு⋆ முப்போதும் உன்னடி வணங்கி⋆
தத்துவம் இலி என்று நெஞ்செரிந்து⋆
    வாசகத்தழித்துன்னை வைதிடாமே⋆
கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு⋆
    கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி⋆
வித்தகன் வேங்கட வாணன் என்னும்⋆
    விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே (3)

சுவரில் புராண! நின் பேர் எழுதிச்⋆
சுறவ நற்கொடிகளும் துரங்கங்களும்⋆
கவரிப் பிணாக்களும் கருப்பு வில்லும்⋆
காட்டித் தந்தேன் கண்டாய் காமதேவா⋆
அவரைப் பிராயம் தொடங்கி⋆ என்றும்
ஆதரித்தெழுந்த என் தட முலைகள்⋆
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்⋆
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே (4)

வானிடை வாழும் அவ்வானவர்க்கு⋆
மறையவர் வேள்வியில் வகுத்த அவி⋆
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து⋆
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப⋆
ஊனிடை ஆழி சங்குத்தமர்க்கென்று⋆
உன்னித்தெழுந்த என் தட முலைகள்⋆
மானிடவர்க்கென்று பேச்சுப்படில்⋆
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே! (5)

உருவுடையார் இளையார்கள் நல்லார்⋆
ஒத்து வல்லார்களைக் கொண்டு⋆ வைகல்
தெருவிடை எதிர்கொண்டு⋆ பங்குனி நாள்
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா⋆
கருவுடை முகில் வண்ணன் காயாவண்ணன்⋆
கருவிளை போல் வண்ணன் கமல வண்ணத்⋆
திருவுடை முகத்தினில் திருக் கண்களால்⋆
திருந்தவே நோக்கெனக்கருள் கண்டாய் (6)

காயுடை நெல்லொடு கரும்பமைத்துக்⋆
கட்டியரிசி அவல் அமைத்து⋆
வாயுடை மறையவர் மந்திரத்தால்⋆
மன்மதனே! உன்னை வணங்குகின்றேன்⋆
தேசமுன் அளந்தவன் திரிவிக்கிரமன்⋆
திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்⋆

சாயுடை வயிறும் என் தட முலையும்⋆
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே (7)

மாசுடை உடம்பொடு தலை உலறி⋆
வாய்ப்புறம் வெளுத்தொரு போதும் உண்டு⋆
தேசுடைத் திறல் உடைக் காமதேவா!⋆
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய்⋆
பேசுவதொன்றுண்டிங்கெம்பெருமான்⋆
பெண்மையைத் தலை உடைத்தாக்கும் வண்ணம்⋆
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்
என்னும்⋆ இப்பேறெனக்கருள் கண்டாய் (8)

தொழுது முப்போதும் உன்னடி வணங்கி⋆
தூமலர் தூய்த் தொழுதேத்துகின்றேன்⋆
பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே⋆
பணிசெய்து வாழப் பெறாவிடில் நான்⋆
அழுதழுதலமந்தம்மா வழங்க⋆
ஆற்றவும் அதுவுனக்குறைக்கும் கண்டாய்⋆
உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து⋆
ஊட்டம் இன்றி துரந்தால் ஒக்குமே (9)

‡கருப்புவில் மலர்க்கணைக் காமவேளைக்⋆
கழலிணை பணிந்தங்கோர் கரி அலற⋆
மருப்பினை ஒசித்துப் புள் வாய் பிளந்த⋆
மணிவண்ணற்கென்னை வகுத்திடென்று⋆
பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும்⋆
புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை⋆
விருப்புடை இன்தமிழ் மாலை வல்லார்⋆
விண்ணவர் கோன் அடி நண்ணுவரே (10)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நாமமாயிரம் ॥

சிறுமியர் மாயனைத் தம் "சிற்றில் சிதையேல்!" எனல்

‡நாமம் ஆயிரம் ஏத்த நின்ற⋆
    நாராயணா! நரனே!⋆ உன்னை
மாமி தன் மகன் ஆகப் பெற்றால்⋆
    எமக்கு வாதை தவிருமே⋆
காமன் போதரு காலம் என்று⋆
    பங்குனி நாள் கடை பாரித்தோம்⋆
தீமை செய்யும் சிரீதரா!⋆ எங்கள்
    சிற்றில் வந்து சிதையேலே (1)

இன்று முற்றும் முதுகு நோவ⋆
    இருந்திழைத்த இச்சிற்றிலை⋆
நன்றும் கண்ணுற நோக்கி⋆ நாம் கொளும்
    ஆர்வந்தன்னைத் தணிகிடாய்⋆
அன்று பாலகன் ஆகி⋆ ஆலிலை
    மேல் துயின்ற எம் ஆதியாய்!⋆
என்றும் உன்றனக்கெங்கள் மேல்⋆ இரக்-
    கம் எழாததெம் பாவமே (2)

குண்டு நீர் உறை கோளரீ!⋆ மத
    யானை கோள் விடுத்தாய்!⋆ உன்னைக்-
கண்டு மால் உறுவோங்களைக்⋆ கடைக்-
    கண்களால் இட்டு வாதியேல்⋆
வண்டல் நுண் மணல் தெள்ளி⋆ யாம் வளைக்-
    கைகளால் சிரமப் பட்டோம்⋆
தெண் திரைக்கடல் பள்ளியாய்!⋆ எங்கள்
    சிற்றில் வந்து சிதையேலே (3)

பெய்யு மா முகில் போல் வண்ணா!⋆ உன்றன்
    பேச்சும் செய்கையும்⋆ எங்களை
மையல் ஏற்றி மயக்க⋆ உன் முகம்
    மாய மந்திரம் தான் கொலோ⋆
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு⋆ உன்னை
    நோவ நாங்கள் உரைக்கிலோம்⋆
செய்ய தாமரைக் கண்ணினாய்!⋆ எங்கள்
    சிற்றில் வந்து சிதையேலே (4)

வெள்ளை நுண் மணல் கொண்டு⋆ சிற்றில்
    விசித்திரப் பட⋆ வீதி வாய்த்-
தெள்ளி நாங்கள் இழைத்த கோலம்
    அழித்தி யாகிலும்⋆ உன்றன் மேல்⋆
உள்ளம் ஓடி உருகலல்லால்⋆
    உரோடம் ஒன்றும் இலோம் கண்டாய்⋆
கள்ள மாதவா! கேசவா!⋆ உன்
    முகத்தன கண்கள் அல்லவே! (5)

முற்றிலாத பிள்ளைகளோம்⋆ முலை
    போந்திலா தோமை⋆ நாள்தொறும்
சிற்றில் மேல் இட்டுக் கொண்டு⋆ நீ சிறி-
    துண்டு திண்ணென நாம் அது
கற்றிலோம்⋆ கடலை அடைத்தரக்-
    கர் குலங்களை⋆ முற்றவும்
செற்று⋆ இலங்கையைப் பூசல் ஆக்கிய
    சேவகா!⋆ எம்மை வாதியேல் (6)

பேதநன்கறிவார்களோடு⋆ இவை
    பேசினால் பெரிதின் சுவை⋆
யாதும் ஒன்றறியாத பிள்ளைக-
    ளோமை⋆ நீ நலிந்தென் பயன்⋆
ஓத மா கடல் வண்ணா!⋆ உன் மண-
    வாட்டி மாரொடு சூழுறும்⋆

சேது பந்தம் திருத்தினாய்!⋆ எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே (7)

வட்ட வாய்ச் சிறு தூதையோடு⋆
சிறுசுளகும் மணலும் கொண்டு⋆
இட்டமா விளையாடு வோங்களைச்⋆
சிற்றில் ஈடழித்தென் பயன்⋆
தொட்டுதைத்து நலியேல் கண்டாய்⋆
சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய்⋆
கட்டியும் கைத்தால் இன்னாமை⋆
அறிதியே கடல் வண்ணனே! (8)

முற்றத்தூடு புகுந்து⋆ நின் முகம்
காட்டிப் புன்முறுவல் செய்து⋆
சிற்றிலோடெங்கள் சிந்தையும்⋆ சிதைக்-
கக் கடவையோ கோவிந்தா⋆
முற்ற மண்ணிடம் தாவி⋆ விண்ணுற
நீண்டளந்து கொண்டாய்⋆ எம்மைப்-
பற்றி மெய்ப் பிணக்கிட்டக்கால்⋆ இந்தப்-
பக்கம் நின்றவரென் சொல்லார் (9)

‡சீதை வாய் அமுதம் உண்டாய்!⋆ எங்கள்
சிற்றில் நீ சிதையேல் என்று⋆
வீதிவாய் விளையாடும்⋆ ஆயர்
சிறுமியர் மழலைச் சொல்லை⋆
வேத வாய்த் தொழிலார்கள் வாழ்⋆ வில்லி-
புத்தூர் மன் விட்டுசித்தன் தன்⋆
கோதை வாய்த் தமிழ் வல்லவர்⋆ குறை-
வின்றி வைகுந்தம் சேர்வரே (10)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கோழியழைப்பதன் ॥

கவர்ந்த கூறைகளை வேண்டிக் கன்னியர் கண்ணனை இரத்தல்

‡கோழி அழைப்பதன் முன்னம்⋆
குடைந்து நீராடுவான் போந்தோம்⋆
ஆழியம் செல்வன் எழுந்தான்⋆
அரவணை மேல் பள்ளி கொண்டாய்⋆
ஏழைமை ஆற்றவும் பட்டோம்⋆
இனி என்றும் பொய்கைக்கு வாரோம்⋆
தோழியும் நானும் தொழுதோம்⋆
துகிலைப் பணித்தருளாயே (1)

இதுவென் புகுந்ததிங்கந்தோ!⋆
இப்பொய்கைக்கெவ்வாறு வந்தாய்⋆
மதுவின் துழாய் முடி மாலே!⋆
மாயனே! எங்கள் அமுதே!⋆
விதி இன்மையால் அது மாட்டோம்⋆
வித்தகப் பிள்ளாய்! விரையேல்⋆
குதிகொண்டரவில் நடித்தாய்!⋆
குருந்திடைக் கூறை பணியாய் (2)

எல்லே! ஈதென்ன இளமை⋆
எம் அனைமார் காணில் ஒட்டார்⋆
பொல்லாங்கீதென்று கருதாய்⋆
பூங்குருந்தேறி இருத்தி⋆
வில்லால் இலங்கை அழித்தாய்!⋆
வேண்டியதெல்லாம் தருவோம்⋆
பல்லாரும் காணாமே போவோம்⋆
பட்டைப் பணித்தருளாயே (3)

பரக்க விழித்தெங்கும் நோக்கிப்⋆
    பலர் குடைந்தாடும் சுனையில்⋆
அரக்க நில்லா கண்ண நீர்கள்⋆
    அலமருகின்றவா பாராய்⋆
இரக்கமேல் ஒன்றும் இலாதாய்!⋆
    இலங்கை அழித்த பிரானே⋆
குரக்கரசாவதறிந்தோம்⋆
    குருந்திடைக் கூறை பணியாய் (4)

காலைக் கது விடுகின்ற⋆
    கயலொடு வாளை விரவி⋆
வேலைப் பிடித்தென்னை மார்கள்
    ஓட்டில்⋆ என்ன விளையாட்டோ⋆
கோலச் சிற்றாடை பலவும்
    கொண்டு⋆ நீ ஏறியிராதே⋆
கோலம் கரிய பிரானே!⋆
    குருந்திடைக் கூறை பணியாய் (5)

தடத்தவிழ் தாமரைப் பொய்கை⋆
    தாள்கள் எம் காலைக் கதுவ⋆
விடத் தேள் எறிந்தாலே போல⋆
    வேதனை ஆற்றவும் பட்டோம்⋆
குடத்தை எடுத்தேற விட்டு⋆
    கூத்தாட வல்ல எம் கோவே⋆
படிற்றை எல்லாம் தவிர்ந்து⋆ எங்கள்
    பட்டைப் பணித்தருளாயே (6)

நீரிலே நின்றயர்க்கின்றோம்⋆
    நீதி அல்லாதன செய்தாய்⋆
ஊரகம் சாலவும் சேய்த்தால்⋆
    ஊழி எல்லாம் உணர்வானே!⋆
ஆர்வம் உனக்கே உடையோம்⋆
    அம்மனை மார் காணில் ஒட்டார்⋆

போர விடாய் எங்கள் பட்டை⋆
    பூங்குருந்தேறி இராதே (7)

மாமிமார் மக்களே அல்லோம்⋆
    மற்றும் இங்கெல்லாரும் போந்தார்⋆
தூமலர்க் கண்கள் வளரத்⋆
    தொல்லை இராத் துயில்வானே!⋆
சேமமேல் அன்றிது சால⋆
    சிக்கென நாம் இது சொன்னோம்⋆
கோமள ஆயர் கொழுந்தே!⋆
    குருந்திடைக் கூறை பணியாய் (8)

கஞ்சன் வலை வைத்த அன்று⋆
    காரிருள் எல்லில் பிழைத்து⋆
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய்⋆
    நின்ற இக்கன்னியரோமை⋆
அஞ்ச உரப்பாள் அசோதை⋆
    ஆணாட விட்டிட்டிருக்கும்⋆
வஞ்சகப் பேய்ச்சிபால் உண்ட⋆
    மசிமையிலீ! கூறை தாராய் (9)

‡கன்னியரோடெங்கள் நம்பி⋆
    கரிய பிரான் விளையாட்டைப்⋆
பொன் இயல் மாடங்கள் சூழ்ந்த⋆
    புதுவையர் கோன் பட்டன் கோதை⋆
இன்னிசையால் சொன்ன மாலை⋆
    ஈரைந்தும் வல்லவர் தாம் போய்⋆
மன்னிய மாதவனோடு⋆
    வைகுந்தம் புக்கிருப்பாரே (10)

‖ ஆண்டாள் திருவடிகளே சரணம் ‖

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தெள்ளியார் பலர் ॥

## கூடல் இழைத்தல்

‡தெள்ளியார் பலர்⋆ கை தொழும் தேவனார்⋆
வள்ளல்⋆ மாலிருஞ்சோலை மணாளனார்⋆
பள்ளி கொள்ளும் இடத்து⋆ அடி கொட்டிடக்⋆
கொள்ளு மாகில்⋆ நீ கூடிடு கூடலே! (1)

‡காட்டில் வேங்கடம்⋆ கண்ணபுர நகர்⋆
வாட்டம் இன்றி⋆ மகிழ்ந்துறை வாமனன்⋆
ஓட்டரா வந்து⋆ என் கைப் பற்றி⋆ தன்னொடும்
கூட்டு மாகில்⋆ நீ கூடிடு கூடலே! (2)

பூ மகன் புகழ் வானவர்⋆ போற்றுதற்-
காமகன்⋆ அணி வாணுதல்⋆ தேவகி
மாமகன்⋆ மிகு சீர்⋆ வசுதேவர் தம்⋆
கோமகன் வரில்⋆ கூடிடு கூடலே! (3)

ஆய்ச்சி மார்களும்⋆ ஆயரும் அஞ்சிட⋆
பூத்த நீள்⋆ கடம்பேறிப் புகப் பாய்ந்து⋆
வாய்த்த காளியன்மேல்⋆ நடம் ஆடிய⋆
கூத்தனார் வரில்⋆ கூடிடு கூடலே! (4)

மாட மாளிகை சூழ்⋆ மதுரைப் பதி
நாடி⋆ நம் தெருவின் நடுவே வந்திட்டு⋆
ஓடை மா⋆ மத யானை உதைத்தவன்⋆
கூடுமாகில்⋆ நீ கூடிடு கூடலே! (5)

அற்றவன்⋆ மருதம் முறிய நடை
கற்றவன்⋆ கஞ்சனை⋆ வஞ்சனையில்
செற்றவன்⋆ திகழும்⋆ மதுரைப் பதி⋆
கொற்றவன் வரில்⋆ கூடிடு கூடலே! (6)

அன்றின்னாதன செய்⋆ சிசுபாலனும்⋆
நின்ற நீள்⋆ மருதும் எருதும் புள்ளும்⋆
வென்றி வேல் விறல்⋆ கஞ்சனும் வீழ⋆ முன்
கொன்றவன் வரில்⋆ கூடிடு கூடலே! (7)

ஆவல் அன்புடயார்⋆ தம் மனத்தன்றி
மேவலன்⋆ விரைசூழ்⋆ துவராபதிக்-
காவலன்⋆ கன்று மேய்த்து விளையாடும்⋆
கோவலன் வரில்⋆ கூடிடு கூடலே! (8)

கொண்ட கோலக்⋆ குறள் உருவாய்ச் சென்று⋆
பண்டு மாவலி தன்⋆ பெரு வேள்வியில்⋆
அண்டமும் நிலனும்⋆ அடி ஒன்றினால்⋆
கொண்டவன் வரில்⋆ கூடிடு கூடலே! (9)

பழகு நான்மறையின் பொருளாய்⋆ மதம்
ஒழுகு வாரணம்⋆ உய்ய அளித்த⋆ எம்
அழகனார்⋆ அணி ஆய்ச்சியர் சிந்தையுள்⋆
குழகனார் வரில்⋆ கூடிடு கூடலே! (10)

‡ஊடல் கூடல்⋆ உணர்தல் புணர்தலை⋆
நீடு நின்ற⋆ நிறை புகழ் ஆய்ச்சியர்⋆
கூடலைக்⋆ குழற் கோதை முன் கூறிய⋆
பாடல் பத்தும் வல்லார்க்கு⋆ இல்லை பாவமே (11)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மன்னு பெரும்புகழ் ॥

## குயிற்பத்து

‡மன்னு பெரும்புகழ் மாதவன்⋆ மா மணி
வண்ணன் மணிமுடி மைந்தன்
தன்னை⋆ உகந்தது காரணமாக⋆ என்
சங்கிழக்கும் வழக்குண்டே⋆
புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப்⋆
பொதும்பினில் வாழும் குயிலே!⋆
பன்னி எப்போதும் இருந்து விரைந்து⋆ என்
பவள வாயன் வரக் கூவாய் (1)

வெள்ளை விளிசங்கிடம் கையில் கொண்ட⋆
விமலன் எனக்குருக் காட்டான்⋆
உள்ளம் புகுந்தென்னை நைவித்து⋆ நாளும்
உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்⋆
கள்ளவிழ் செண்பகப்பூ மலர் கோதிக்⋆
களித்திசை பாடும் குயிலே⋆
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது⋆ என்
வேங்கடவன் வரக் கூவாய் (2)

மாதலி தேர் முன்பு கோல்கொள்ள⋆ மாயன்
இராவணன் மேல்⋆ சர மாரி
தாய் தலை அற்றற்று வீழத்⋆ தொடுத்த
தலைவன் வர எங்கும் காணேன்⋆
போதலர் காவில் புதுமணம் நாறப்⋆
பொறி வண்டின் காமரம் கேட்டு⋆ உன்
காதலியோடுடன் வாழ் குயிலே!⋆ என்
கருமாணிக்கம் வரக் கூவாய் (3)

என்புருகி இன வேல் நெடுங்கண்கள்⋆
    இமை பொருந்தா பல நாளும்⋆
துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர்⋆
    தோணி பெறாதுழல்கின்றேன்⋆
அன்புடையாரைப் பிரிவுறு நோய்⋆ அது
    நீயும் அறிதி குயிலே⋆
பொன் புரை மேனிக் கருளக் கொடி உடை⋆
    புண்ணியனை வரக் கூவாய் (4)

‡மென்னடை அன்னம் பரந்து விளையாடும்⋆
    வில்லிபுத்தூர் உறைவான் தன்⋆
பொன்னடி காண்பதோர் ஆசையினால்⋆ என்
    பொரு கயல் கண்ணிணை துஞ்சா⋆
இன் அடிசிலோடு பால் அமுதூட்டி⋆
    எடுத்த என் கோலக் கிளியை⋆
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே!⋆
    உலகளந்தான் வரக் கூவாய் (5)

எத்திசையும் அமரர் பணிந்தேத்தும்⋆
    இருடீகேசன் வலி செய்ய⋆
முத்தன்ன வெண் முறுவல் செய்ய வாயும்
    முலையும்⋆ அழகழிந்தேன் நான்⋆
கொத்தலர் காவில் மணித்தடம் கண்படை⋆
    கொள்ளும் இளங்குயிலே!⋆ என்
தத்துவனை வரக் கூகிற்றியாகில்⋆
    தலை அல்லால் கைம்மாறிலேனே! (6)

பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப்⋆
    புணர்வதோர் ஆசையினால்⋆ என்
கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து⋆
    ஆவியை ஆகுலம் செய்யும்
அங்குயிலே!⋆ உனக்கென்ன மறைந்துறைவு⋆
    ஆழியும் சங்கும் ஒண் தண்டும்⋆

தங்கிய கையவனை வரக் கூவில்⋆ நீ
சாலத் தருமம் பெறுதி (7)

சார்ங்கம் வளைய வலிக்கும்⋆ தடக்கைச்
சதுரன் பொருத்தம் உடையன்⋆
நாங்கள் எம் இல்லிருந்தொட்டிய கச்சங்கம்⋆
நானும் அவனும் அறிதும்⋆
தேங்கனி மாம் பொழில் செந்தளிர் கோதும்⋆
சிறு குயிலே!⋆ திருமாலை
ஆங்கு விரைந்தொல்லைக் கூகிற்றியாகில்⋆
அவனை நான் செய்வன காணே! (8)

பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர்⋆
பாசத்தகப் பட்டிருந்தேன்⋆
பொங்கொளி வண்டிரைக்கும் பொழில் வாழ் குயிலே!⋆
குறிக்கொண்டிது நீ கேள்⋆
சங்கொடு சக்கரத்தான் வரக் கூவுதல்⋆
பொன்வளை கொண்டு தருதல்⋆
இங்குள்ள காவினில் வாழக் கருதில்⋆
இரண்டத்தொன்றேல் திண்ணம் வேண்டும் (9)

அன்றுலகம் அளந்தானை உகந்து⋆
அடிமைக்கண் அவன் வலி செய்ய⋆
தென்றலும் திங்களும் ஊடறுத்து⋆ என்னை
நலியும் முறைமை அறியேன்⋆
என்றும் இக்காவில் இருந்திருந்து⋆ என்னைத்-
தகர்த்தாதே நீயும் குயிலே!⋆
இன்று நாராயணனை வரக் கூவாயேல்⋆
இங்குற்று நின்றும் துரப்பன் (10)

‡விண்ணுற நீண்டடி தாவிய மைந்தனை⋆
வேற்கண் மடந்தை விரும்பி⋆
கண்ணுற என் கடல் வண்ணனைக் கூவு⋆
கருங்குயிலே! என்ற மாற்றம்⋆

பண்ணுறு நான் மறையோர் புதுவை மன்னன்⋆
　　பட்டர்பிரான் கோதை சொன்ன⋆
நண்ணுறு வாசக மாலை வல்லார்⋆ நமோ
　　நாராயணாய என்பாரே! (11)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வாரணமாயிரம் ॥

## மாயவன் தன்னை மணஞ்செய்யக் கண்ட தூயநற் கனைவைத் தோழிக் குரைத்தல்

‡வாரணம் ஆயிரம்⋆ சூழ வலம் செய்து⋆
நாரண நம்பி⋆ நடக்கின்றான் என்றெதிர்⋆
பூரண பொற்குடம்⋆ வைத்துப் புறம் எங்கும்⋆
தோரணம் நாட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (1)

நாளை வதுவை⋆ மணம் என்று நாள் இட்டு⋆
பாளை கமுகு⋆ பரிசுடைப் பந்தல் கீழ்⋆
கோளரி மாதவன்⋆ கோவிந்தன் என்பான் ஓர்⋆
காளை புகுதக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (2)

இந்திரன் உள்ளிட்ட⋆ தேவர் குழாம் எல்லாம்⋆
வந்திருந்தென்னை⋆ மகட்பேசி மந்திரித்து⋆
மந்திரக் கோடி உடுத்தி⋆ மண மாலை⋆
அந்தரி சூட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (3)

நால் திசைத் தீர்த்தம்⋆ கொணர்ந்து நனி நல்கி⋆
பார்ப்பனச் சிட்டர்கள்⋆ பல்லார் எடுத்தேத்தி⋆
பூப் புனை கண்ணிப்⋆ புனிதனோடென் தன்னை⋆
காப்பு நாண் கட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (4)

கதிரொளி தீபம்⋆ கலசம் உடன் ஏந்தி⋆
சதிரிள மங்கையர்⋆ தாம் வந்தெதிர் கொள்ள⋆
மதுரையார் மன்னன்⋆ அடிநிலை தொட்டு⋆ எங்கும்
அதிரப் புகுதக்⋆ கனாக் கண்டேன் தோழீ!நான் (5)

மத்தளம் கொட்ட⋆ வரி சங்கம் நின்றூத⋆
முத்துடைத் தாமம்⋆ நிரை தாழ்ந்த பந்தல் கீழ்⋆

மைத்துனன் நம்பி⋆ மதுசூதன் வந்து⋆ என்னைக்-
கைத்தலம் பற்றக்⋆ கனாக்கண்டேன் தோழீ!நான் (6)

வாய் நல்லார்⋆ நல்ல மறை ஓதி மந்திரத்தால்⋆
பாசிலை நாணல் படுத்துப்⋆ பரிதி வைத்து⋆
காய் சின மாகளிறு⋆ அன்னான் என் கைப்பற்றி⋆
தீ வலம் செய்யக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (7)

இம்மைக்கும்⋆ ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்⋆
நம்மை உடையவன்⋆ நாராயணன் நம்பி⋆
செம்மை உடைய⋆ திருக்கையால் தாள் பற்றி⋆
அம்மி மிதிக்கக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (8)

வரிசிலை வாள் முகத்து⋆ என்னைமார் தாம் வந்திட்டு⋆
எரிமுகம் பாரித்து⋆ என்னை முன்னே நிறுத்தி⋆
அரிமுகன் அச்சுதன்⋆ கைம்மேல் என் கை வைத்து⋆
பொரிமுகந்தட்டக்⋆ கனாக்கண்டேன் தோழீ! நான் (9)

குங்குமம் அப்பிக்⋆ குளிர் சாந்தம் மட்டித்து⋆
மங்கல வீதி⋆ வலம் செய்து மண நீர்⋆
அங்கவனோடும் உடன் சென்று⋆ அங்கானை மேல்⋆
மஞ்சனம் ஆட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (10)

‡ஆயனுக் காகத்⋆ தான் கண்ட கனாவினை⋆
வேயர் புகழ்⋆ வில்லிபுத்தூர்க்கோன் கோதை சொல்⋆
தூய தமிழ் மாலை⋆ ஈரைந்தும் வல்லவர்⋆
வாயுநன் மக்களை பெற்று⋆ மகிழ்வரே (11)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கருப்பூரம் நாறுமோ ॥

பாஞ்சசன்னியத்தைப் பத்மநாபனோடும் சுற்றமாக்குதல்

‡கருப் பூரம் நாறுமோ⋆ கமலப் பூ நாறுமோ⋆
திருப் பவளச் செவ்வாய் தான்⋆ தித்தித்திருக்குமோ⋆
மருப்பொசித்த மாதவன் தன்⋆ வாய்ச் சுவையும் நாற்றமும்⋆
விருப்புற்றுக் கேட்கின்றேன்⋆ சொல் ஆழி வெண் சங்கே! (1)

கடலில் பிறந்து⋆ கருதாது⋆ பஞ்சசனன்
உடலில் வளர்ந்துபோய்⋆ ஊழியான் கைத்தலத்து⋆
இடரில் குடியேறி⋆ தீய அசுரர்⋆
நடலைப் பட முழங்கும்⋆ தோற்றத்தாய் நல் சங்கே! (2)

தட வரையின் மீதே⋆ சரத் கால சந்திரன்⋆
இடை உவாவில் வந்து⋆ எழுந்தாலே போல⋆ நீயும்
வட மதுரையார் மன்னன்⋆ வாசுதேவன் கையில்⋆
குடியேறி வீற்றிருந்தாய்⋆ கோலப் பெரும் சங்கே! (3)

சந்திர மண்டலம் போல்⋆ தாமோதரன் கையில்⋆
அந்தரம் ஒன்றின்றி⋆ ஏறி அவன் செவியில்⋆
மந்திரம் கொள்வாயே போலும்⋆ வலம்புரியே⋆
இந்திரனும் உன்னோடு⋆ செல்வத்துக்கேலானே (4)

உன்னோடுடனே⋆ ஒரு கடலில் வாழ்வாரை⋆
இன்னார் இனையார் என்று⋆ எண்ணுவார் இல்லை காண்⋆
மன்னாகி நின்ற⋆ மதுசூதன் வாயமுதம்⋆
பன்னாளும் உண்கின்றாய்⋆ பாஞ்சசன்னியமே! (5)

போய்த் தீர்த்தம் ஆடாதே⋆ நின்ற புணர் மருதம்⋆
சாய்த்தீர்த்தான் கைத்தலத்தே⋆ ஏறிக் குடிகொண்டு⋆
சேய்த் தீர்த்தமாய் நின்ற⋆ செங்கண் மால் தன்னுடைய⋆
வாய்த் தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய்⋆ வலம்புரியே! (6)

செங்கமல நாள் மலர்மேல்⋆ தேனுகரும் அன்னம் போல்⋆
செங்கண் கருமேனி⋆ வாசுதேவனுடய⋆
அங்கைத் தலம் ஏறி⋆ அன்ன வசம் செய்யும்⋆
சங்கரையா! உன் செல்வம்⋆ சால அழகியதே! (7)

உண்பது சொல்லில்⋆ உலகளந்தான் வாயமுதம்⋆
கண்படை கொள்ளில்⋆ கடல் வண்ணன் கைத்தலத்தே⋆
பெண் படையார் உன் மேல்⋆ பெரும் பூசல் சாற்றுகின்றார்⋆
பண்பல செய்கின்றாய்⋆ பாஞ்சசன்னியமே! (8)

பதினாறாம் ஆயிரவர்⋆ தேவிமார் பார்த்திருப்ப⋆
மது வாயில் கொண்டாற்போல்⋆ மாதவன் தன் வாயமுதம்⋆
பொதுவாக உண்பதனைப்⋆ புக்கு நீ உண்டக்கால்⋆
சிதையாரோ உன்னோடு⋆ செல்வப் பெரும் சங்கே! (9)

‡பாஞ்சசன்னியத்தைப்⋆ பற்பநாபனோடும்⋆
வாய்ந்த பெரும் சுற்றம் ஆக்கிய⋆ வண் புதுவை⋆
ஏய்ந்த புகழ்ப் பட்டர்பிரான்⋆ கோதை தமிழ் ஈரைந்தும்⋆
ஆய்ந்தேத்த வல்லார்⋆ அவரும் அணுக்கரே (10)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ விண்ணீல மேலாப்பு ॥

## மேகவிடு தூது

‡விண்ணீல மேலாப்பு⋆ விரித்தாற்போல் மேகங்காள்⋆
தெண்ணீர் பாய் வேங்கடத்து⋆ என் திருமாலும் போந்தானே⋆
கண்ணீர்கள் முலைக்குவட்டில்⋆ துளிசோரச் சோர்வேனை⋆
பெண்ணீர்மை ஈடழிக்கும்⋆ இது தமக்கோர் பெருமையே (1)

மா முத்தநிதி சொரியும்⋆ மா முகில்காள்⋆ வேங்கடத்துச்
சாமத்தின் நிறங்கொண்ட⋆ தாளாளன் வார்த்தை என்னே⋆
காமத்தீ உள்புகுந்து⋆ கதுவப்பட்டிடைக் கங்குல்⋆
ஏமத்தோர் தென்றலுக்கு⋆ இங்கிலக்காய் நான் இருப்பேனே (2)

ஒளி வண்ணம் வளை சிந்தை⋆ உறக்கத்தோடிவை எல்லாம்⋆
எளிமையால் இட்டென்னை⋆ ஈடழியப் போயினவால்⋆
குளிர் அருவி வேங்கடத்து⋆ என் கோவிந்தன் குணம் பாடி⋆
அளியத்த மேகங்காள்!⋆ ஆவி காத்திருப்பேனே (3)

மின் ஆகத்தெழுகின்ற⋆ மேகங்காள்⋆ வேங்கடத்துத்-
தன் ஆகத் திருமங்கை⋆ தங்கிய சீர் மார்வற்கு⋆
என் ஆகத்திளங்கொங்கை⋆ விரும்பித் தாம் நாடோறும்⋆
பொன் ஆகம் புல்குதற்கு⋆ என் புரிவுடைமை செப்புமினே (4)

வான் கொண்டு கிளர்ந்தெழுந்த⋆ மா முகில்காள்!⋆ வேங்கடத்துத்-
தேன் கொண்ட மலர் சிதறத்⋆ திரண்டேறிப் பொழிவீர்காள்⋆
ஊன் கொண்ட வள் உகிரால்⋆ இரணியனை உடல் இடந்தான்⋆
தான் கொண்ட சரி வளைகள்⋆ தருமாகில் சாற்றுமினே (5)

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த⋆ தண் முகில்காள்! மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே⋆ நிரந்தேறிப் பொழிவீர்காள்⋆
உலங்குண்ட விளங்கனி போல்⋆ உள் மெலியப் புகுந்து⋆ என்னை
நலங்கொண்ட நாரணற்கு⋆ என் நடலை நோய் செப்புமினே (6)

‡சங்க மா கடல் கடைந்தான்⋆ தண் முகில்காள்!⋆ வேங்கடத்துச்
செங்கண் மால் சேவடிக் கீழ்⋆ அடி வீழ்ச்சி விண்ணப்பம்⋆
கொங்கை மேல் குங்குமத்தின்⋆ குழம்பழியப் புகுந்து⋆ ஒருநாள்
தங்குமேல் என் ஆவி⋆ தங்குமென்றுரையீரே (7)

கார் காலத்தெழுகின்ற⋆ கார்முகில்காள்!⋆ வேங்கடத்துப்-
போர் காலத்தெழுந்தருளிப்⋆ பொருதவனார் பேர் சொல்லி⋆
நீர் காலத் தெருக்கிலம்⋆ பழவிலை போல் வீழ்வேனை⋆
வார் காலத்தொரு நாள்⋆ தம் வாசகம் தந்தருளாரே (8)

‡மத யானை போல் எழுந்த⋆ மா முகில்காள்!⋆ வேங்கடத்தைப்-
பதியாக வாழ்வீர்காள்!⋆ பாம்பணையான் வார்த்தை என்னே⋆
கதி என்றும் தான் ஆவான்⋆ கருதாது⋆ ஓர் பெண் கொடியை
வதை செய்தான் என்னும் சொல்⋆ வையகத்தார் மதியாரே (9)

‡நாகத்தின் அணையானை⋆ நன்னுதலாள் நயந்துரை செய்⋆
மேகத்தை வேங்கடக்கோன்⋆ விடுதூதில் விண்ணப்பம்⋆
போகத்தில் வழுவாத⋆ புதுவையர்கோன் கோதை தமிழ்⋆
ஆகத்து வைத்துரைப்பார்⋆ அவர் அடியார் ஆகுவரே (10)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமானுஜாய நம:

# ‖ சிந்துரச் செம்பொடி ‖

*திருமாலிருஞ்சொலை எம்பெருமான் திறத்தீடுபட்டிரங்குதல்*

*‡சிந்துரச் செம்பொடிப் போல்⋆ திருமாலிருஞ்சோலை எங்கும்⋆*
*இந்திர கோபங்களே⋆ எழுந்தும் பரந்திட்டனவால்⋆*
*மந்தரம் நாட்டி அன்று⋆ மதுரக் கொழுஞ்சாறு கொண்ட⋆*
*சுந்தரத் தோளுடையான்⋆ சுழலையினின்றுய்துங்கொலோ!* (1)

*போர்க்களிறு பொரும்⋆ மாலிருஞ்சோலை அம் பூம்புறவில்⋆*
*தார்க்கொடி முல்லைகளும்⋆ தவள நகை காட்டுகின்ற⋆*
*கார்க்கொள் படாக்கள் நின்று⋆ கழறிச் சிரிக்கத் தரியேன்⋆*
*ஆர்க்கிடுகோ தோழி!⋆ அவன் தார் செய்த பூசலையே* (2)

*கருவிளை ஒண்மலர்காள்!⋆ காயா மலர்காள்⋆ திருமால்*
*உருவொளி காட்டுகின்றீர்⋆ எனக்குய் வழக்கொன்றுரையீர்⋆*
*திரு விளையாடு திண் தோள்⋆ திருமாலிருஞ்சோலை நம்பி⋆*
*வரிவளை இல் புகுந்து⋆ வந்தி பற்றும் வழக்குளதே* (3)

*பைம்பொழில் வாழ் குயில்காள்! மயில்காள்!⋆ ஒண் கருவிளைகாள்⋆*
*வம்பக் களங்கனிகாள்!⋆ வண்ணப் பூவை நறுமலர்காள்⋆*
*ஐம் பெரும் பாதகர்காள்!⋆ அணி மாலிருஞ்சோலை நின்ற⋆*
*எம்பெருமானுடைய நிறம்⋆ உங்களுக்கென் செய்வதே* (4)

*துங்க மலர்ப் பொழில் சூழ்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆*
*செங்கண் கருமுகிலின்⋆ திருவுருப் போல்⋆ மலர்மேல்*
*தொங்கிய வண்டினங்காள்!⋆ தொகு பூஞ்சுனைகாள்!⋆ சுனையில்*
*தங்கு செந்தாமரைகாள்!⋆ எனக்கோர் சரண் சாற்றுமினே* (5)

*‡நாறு நறும் பொழில்⋆ மாலிருஞ்சோலை நம்பிக்கு⋆ நான்*
*நூறு தடாவில் வெண்ணெய்⋆ வாய்நேர்ந்து பராவி வைத்தேன்⋆*
*நூறு தடா நிறைந்த⋆ அக்கார அடிசில் சொன்னேன்⋆*
*ஏறு திருவுடையான்⋆ இன்று வந்திவை கொள்ளுங்கொலோ!* (6)

இன்று வந்தித்தனையும்⋆ அமுது செய்திடப் பெறில்⋆ நான்
ஒன்று நூறாயிரமாக் கொடுத்து⋆ பின்னும் ஆளும் செய்வன்⋆
தென்றல் மணம் கமழும்⋆ திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்றபிரான்⋆ அடியேன் மனத்தே⋆ வந்து நேர் படிலே (7)

காலை எழுந்திருந்து⋆ கரிய குருவிக் கணங்கள்⋆
மாலின் வரவு சொல்லி⋆ மருள் பாடுதல் மெய்ம்மைகொலோ⋆
சோலைமலைப் பெருமான்⋆ துவாராபதி எம்பெருமான்⋆
ஆலின் இலைப் பெருமான்⋆ அவன் வார்த்தை உரைக்கின்றதே (8)

கோங்கலரும் பொழில்⋆
மாலிருஞ்சோலையில் கொன்றைகள் மேல்⋆
தூங்கு பொன் மாலைகளோடு⋆
உடனாய் நின்று தூங்குகின்றேன்⋆
பூங்கொள் திருமுகத்து⋆
மடுத்தூதிய சங்கொலியும்⋆
சார்ங்கவில் நாண் ஒலியும்⋆
தலைப் பெய்வதெஞ்ஞான்று கொலோ! (9)

‡சந்தொடு காரகிலும் சுமந்து⋆ தடங்கள் பொருது⋆
வந்திழியும் சிலம்பாறுடை⋆ மாலிருஞ்சோலை நின்ற
சுந்தரனை⋆ சுரும்பார் குழல் கோதை⋆ தொகுத்துரைத்த⋆
செந்தமிழ் பத்தும் வல்லார்⋆ திருமாலடி சேர்வர்களே (10)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கார்க்கோடல் பூக்காள் ॥

## தலைவி பிரிவாற்றாது வருந்துதல்

‡கார்க் கோடல் பூக்காள்!⋆ கார்க்கடல்
வண்ணன் என் மேல்⋆ உம்மைப்-
போர்க் கோலம் செய்து⋆ போர
விடுத்தவன் எங்குற்றான்⋆
ஆர்க்கோ இனி நாம்⋆
பூசல் இடுவது⋆ அணிதுழாய்த்-
தார்க்கோடும் நெஞ்சந் தன்னை⋆
படைக்க வல்லேன் அந்தோ! (1)

மேல் தோன்றிப் பூக்காள்!⋆ மேல் உலகங்களின் மீது போய்⋆
மேல் தோன்றும் சோதி⋆ வேத முதல்வர் வலங்கையில்⋆
மேல் தோன்றும் ஆழியின்⋆ வெஞ்சுடர் போலச் சுடாது⋆ எம்மை
மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து⋆ வைத்து கொள்கிற்றிரே (2)

கோவை மணாட்டி!⋆ நீ உன் கொழுங்கனி கொண்டு⋆ எம்மை
ஆவி தொலைவியேல்⋆ வாயழகர் தம்மை அஞ்சுதும்⋆
பாவியேன் தோன்றி⋆ பாம்பணையார்க்கும் தம் பாம்பு போல்⋆
நாவும் இரண்டுள வாய்த்து⋆ நாணிலியேனுக்கே (3)

முல்லைப் பிராட்டி!⋆ நீ உன் முறுவல்கள் கொண்டு⋆ எம்மை
அல்லல் விளைவியேல்⋆ ஆழி நங்காய்! உன் அடைக்கலம்⋆
கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட⋆ குமரனார்
சொல்லும் பொய்யானால்⋆ நானும் பிறந்தமை பொய் அன்றே (4)

பாடும் குயில்காள்!⋆ ஈதென்ன பாடல்⋆ நல் வேங்கட
நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால்⋆ வந்து பாடுமின்⋆
ஆடும் கருளக் கொடி உடையார்⋆ வந்தருள் செய்து⋆
கூடுவராயிடில்⋆ கூவி நும் பாட்டுகள் கேட்டுமே (5)

கண மா மயில்காள்!⋆ கண்ணபிரான் திருக்கோலம் போன்று⋆
அணி மா நடம் பயின்றாடுகின்றீர்க்கு⋆ அடி வீழ்கின்றேன்⋆
பணம் ஆடரவணைப்⋆ பற்பல காலமும் பள்ளிகொள்⋆
மணவாளர் நம்மை வைத்த பரிசு⋆ இது காண்மினே (6)

நடம் ஆடித் தோகை விரிக்கின்ற⋆ மா மயில்காள்⋆ உம்மை
நடம் ஆட்டம் காணப்⋆ பாவியேன் நான் ஓர் முதல் இலேன்⋆
குடம் ஆடு கூத்தன்⋆ கோவிந்தன் கோமிறை செய்து⋆ எம்மை
உடைமாடு கொண்டான்⋆ உங்களுக்கினியொன்று போதுமே (7)

மழையே! மழையே! மண் புறம்
பூசி⋆ உள்ளாய் நின்று⋆
மெழுகூற்றினாற் போல்⋆ ஊற்றுநல்
வேங்கடத்துள் நின்ற⋆
அழகப் பிரானார் தம்மை⋆ என்
நெஞ்சத்தகப்படத்-
தழுவ நின்று⋆ என்னைத் ததர்த்திக் கொண்டு⋆
ஊற்றவும் வல்லையே (8)

கடலே! கடலே! உன்னைக் கடைந்து⋆ கலக்குறுத்து⋆
உடலுள் புகுந்து⋆ நின்றூறல் அறுத்தவற்கு⋆ என்னையும்
உடலுள் புகுந்து⋆ நின்றூறல் அறுக்கின்ற மாயற்கு⋆ என்
நடலைகள் எல்லாம்⋆ நாகணைக்கே சென்றுரைத்தியே (9)

‡நல்ல என் தோழி!⋆ நாகணை மிசை நம்பரர்⋆
செல்வர் பெரியர்⋆ சிறு மானிடவர் நாம் செய்வதென்⋆
வில்லி புதுவை⋆ விட்டுசித்தர் தங்கள் தேவரை⋆
வல்ல பரிசு வருவிப்பரேல்⋆ அது காண்டுமே (10)

॥ஆண்டாள் திருவடிகளே சரணம்॥

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ தாமுகக்கும் ॥

## திருவரங்கத்துறை செல்வனைக் காமுறல்

‡தாம் உகக்கும் தம் கையில்⋆ சங்கமே போலாவோ⋆
யாம் உகக்கும் எம் கையில்⋆ சங்கமும் ஏந்திழையீர்!⋆
தீ முகத்து நாகணைமேல்⋆ சேரும் திருவரங்கர்⋆
ஆ! முகத்தை நோக்காரால்⋆ அம்மனே! அம்மனே! (1)

எழில் உடைய அம்மனைமீர்!⋆ என் அரங்கத்தின்னமுதர்⋆
குழல் அழகர் வாய் அழகர்⋆ கண் அழகர்⋆ கொப்பூழில்
எழு கமலப் பூவழகர்⋆ எம் மானார்⋆ என்னுடைய
கழல் வளையைத் தாமும்⋆ கழல் வளையே ஆக்கினரே (2)

‡பொங்கோதம் சூழ்ந்த⋆ புவனியும் விண் உலகும்⋆
அங்காதும் சோராமே⋆ ஆள்கின்ற எம்பெருமான்⋆
செங்கோல் உடைய⋆ திருவரங்கச் செல்வனார்⋆
எங்கோல் வளையால்⋆ இடர் தீர்வர் ஆகாதே (3)

மச்சணி மாட⋆ மதிள் அரங்கர் வாமனனார்⋆
பச்சைப் பசுந் தேவர்⋆ தாம் பண்டு நீர் ஏற்ற⋆
பிச்சைக் குறையாகி⋆ என்னுடைய பெய்வளை மேல்⋆
இச்சை உடையரேல்⋆ இத்தெருவே போதாரே (4)

பொல்லாக் குறள் உருவாய்⋆ பொற் கையில் நீர் ஏற்று⋆
எல்லா உலகும்⋆ அளந்து கொண்ட எம் பெருமான்⋆
நல்லார்கள் வாழும்⋆ நளிர் அரங்க நாகணையான்⋆
இல்லாதோம் கைப்பொருளும்⋆ எய்துவான் ஒத்துளனே (5)

கைப் பொருள்கள் முன்னமே⋆ கைக் கொண்டார்⋆ காவிரி நீர்
செய்ப் புரள ஓடும்⋆ திருவரங்கச் செல்வனார்⋆
எப்பொருட்கும் நின்றார்க்கும்⋆ எய்தாது⋆ நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார்⋆ என் மெய்ப்பொருளும் கொண்டாரே (6)

உண்ணாதுறங்காது⋆ ஒலிகடலை ஊடறுத்துப்⋆
பெண் ஆக்கை யாப்புண்டு⋆ தாம் உற்ற பேதெல்லாம்⋆
திண்ணார் மதிள் சூழ்⋆ திருவரங்கச் செல்வனார்⋆
எண்ணாதே தம்முடைய⋆ நன்மைகளே எண்ணுவரே (7)

‡பாசி தூர்த்துக் கிடந்த⋆ பார் மகட்குப்⋆ பண்டொருநாள்
மாசுடம்பில் நீர் வாரா⋆ மானம் இலாப் பன்றியாம்⋆
தேசுடைய தேவர்⋆ திருவரங்கச் செல்வனார்⋆
பேசியிருப்பனகள்⋆ பேர்க்கவும் பேராவே (8)

கண்ணாலம் கோடித்துக்⋆ கன்னி தன்னைக் கைப் பிடிப்பான்⋆
திண் ஆர்ந்திருந்த⋆ சிசுபாலன் தேசழிந்து⋆
அண்ணாந்திருக்கவே⋆ ஆங்கவளைக் கைப் பிடித்த⋆
பெண்ணாளன் பேணும் ஊர்⋆ பேரும் அரங்கமே (9)

‡செம்மை உடைய⋆ திருவரங்கர் தாம் பணித்த⋆
மெய்ம்மைப் பெரு வார்த்தை⋆ விட்டுசித்தர் கேட்டிருப்பர்⋆
தம்மை உகப்பாரைத்⋆ தாம் உகப்பர் என்னும் சொல்⋆
தம்மிடையே பொய்யானால்⋆ சாதிப்பார் ஆர் இனியே! (10)

‖ ஆண்டாள் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மற்றிருந்தீர் ॥

*"சீதரனிருந்துழிச் செலுத்துவீர் எனை" எனக் கோதை தமர்க்குக் கூறிய துணிபு*

*‡மற்றிருந்தீர்கட்கறியலாகா⋆*
*மாதவன் என்பதோர் அன்புதன்னை⋆*
*உற்றிருந்தேனுக்குரைப்பதெல்லாம்⋆*
*ஊமையரோடு செவிடர் வார்த்தை⋆*
*பெற்றிருந்தாளை ஒழியவே போய்⋆*
*பேர்த்தொரு தாயில் வளர்ந்த நம்பி⋆*
*மற் பொருந்தாமல் களம் அடைந்த⋆*
*மதுரைப் புறத்தென்னை உய்த்திடுமின்* (1)

*நாணி இனியோர் கருமம் இல்லை⋆*
*நால் அயலாரும் அறிந்தொழிந்தார்⋆*
*பாணியாதென்னை மருந்து செய்து⋆*
*பண்டு பண்டாக்க உறுதிராகில்⋆*
*மாணி உருவாய் உலகளந்த⋆*
*மாயனைக் காணில் தலைமறியும்⋆*
*ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில்⋆*
*ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின்* (2)

*தந்தையும் தாயும் உற்றாரும் நிற்க⋆*
*தனிவழி போயினாள்! என்னும் சொல்லு⋆*
*வந்த பின்னைப் பழி காப்பரிது⋆*
*மாயவன் வந்துருக் காட்டுகின்றான்⋆*
*கொந்தளம் ஆக்கிப் பரக்கழித்து⋆*
*குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற⋆*
*நந்தகோபாலன் கடைத்தலைக்கே⋆*
*நள் இருட்கண் என்னை உய்த்திடுமின்* (3)

அங்கைத் தலத்திடை ஆழி கொண்டான்⋆
    அவன் முகத்தன்றி விழியேன் என்று⋆
செங்கச்சுக் கொண்டு கண் ஆடை ஆர்த்துச்⋆
    சிறு மானிடவரைக் காணில் நாணும்⋆
கொங்கைத்தலம் இவை நோக்கிக் காணீர்⋆
    கோவிந்தனுக்கல்லால் வாயில் போகா⋆
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய்⋆
    யமுனைக் கரைக்கென்னை உய்த்திடுமின் (4)

ஆர்க்கும் என்னோய் இதறியலாகாது⋆
    அம்மனைமீர்! துழதிப் படாதே⋆
கார்க்கடல் வண்ணன் என்பான் ஒருவன்⋆
    கைகண்ட யோகம் தடவத் தீரும்⋆
நீர்க் கரை நின்ற கடம்பை ஏறி⋆
    காளியன் உச்சியில் நட்டம் பாய்ந்து⋆
போர்க்களமாக நிருத்தம் செய்த⋆
    பொய்கைக் கரைக்கென்னை உய்த்திடுமின் (5)

கார்த் தண் முகிலும் கருவிளையும்⋆
    காயா மலரும் கமலப் பூவும்⋆
ஈர்த்திடுகின்றன என்னை வந்திட்டு⋆
    இருடீகேசன் பக்கல் போகே என்று⋆
வேர்த்துப் பசித்து வயிறசைந்து⋆
    வேண்டடிசில் உண்ணும் போது⋆ ஈதென்று
பார்த்திருந்து நெடு நோக்குக் கொள்ளும்⋆
    பத்த விலோசனத்துய்த்திடுமின் (6)

வண்ணம் திரிவும் மனம் குழைவும்⋆
    மானம் இலாமையும் வாய் வெளுப்பும்⋆
உண்ணல் உறாமையும் உள் மெலிவும்⋆
    ஓத நீர் வண்ணன் என்பான் ஒருவன்⋆
தண்ணந் துழாய் என்னும் மாலை கொண்டு⋆
    சூட்டத் தணியும் பிலம்பன் தன்னைப்⋆

பண் அழியப் பலதேவன் வென்ற⋆
    பாண்டிவடத்தென்னை உய்த்திடுமின் (7)

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான்⋆
    காடு வாழ் சாதியும் ஆகப் பெற்றான்⋆
பற்றி உரலிடை ஆப்பும் உண்டான்⋆
    பாவிகாள்! உங்களுக்கேச்சுக் கொலோ⋆
கற்றன பேசி வசவுணாதே⋆
    காலிகள் உய்ய மழை தடுத்துக்⋆
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற⋆
    கோவர்த்தனத்தென்னை உய்த்திடுமின் (8)

கூட்டில் இருந்து கிளி எப்போதும்⋆
    கோவிந்தா! கோவிந்தா! என்றழைக்கும்⋆
ஊட்டக் கொடாது செறுப்பனாகில்⋆
    உலகளந்தான்! என்றுயரக் கூவும்⋆
நாட்டில் தலைப்பழி எய்தி⋆ உங்கள்
    நன்மை இழந்து தலையிடாதே⋆
சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்⋆
    துவராபதிக்கென்னை உய்த்திடுமின் (9)

‡மன்னு மதுரை தொடக்கமாக⋆
    வண் துவராபதி தன் அளவும்⋆
தன்னைத் தமர் உய்த்துப் பெய்ய வேண்டித்⋆
    தாழ்குழலாள் துணிந்த துணிவை⋆
பொன் இயல் மாடம் பொலிந்து தோன்றும்⋆
    புதுவையர்கோன் விட்டுசித்தன் கோதை⋆
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை⋆
    ஏத்த வல்லார்க்கிடம் வைகுந்தமே (10)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கண்ணனென்னும் ॥

கண்ணன் உகந்த பொருள்கொண்டு காதல்நோய் தணிமின் எனல்

‡கண்ணன் என்னும் கருந்தெய்வம்⋆
காட்சி பழகிக் கிடப்பேனை⋆
புண்ணில் புளிப் பெய்தாற் போலப்⋆
புறம் நின்றழகு பேசாதே⋆
பெண்ணின் வருத்தம் அறியாத⋆
பெருமான் அரையில் பீதக
வண்ண ஆடை கொண்டு⋆ என்னை
வாட்டம் தணிய வீசீரே (1)

பால் ஆலிலையில் துயில் கொண்ட⋆
பரமன் வலைப்பட்டிருந்தேனை⋆
வேலால் துன்னம் பெய்தாற்போல்⋆
வேண்டிற்றெல்லாம் பேசாதே⋆
கோலால் நிரை மேய்த்தாயனாய்க்⋆
குடந்தைக் கிடந்த குடம் ஆடி⋆
நீலார் தண்ணந் துழாய் கொண்டு⋆ என்
நெறி மென் குழல்மேல் சூட்டீரே (2)

கஞ்சைக் காய்ந்த கருவில்லி⋆
கடைக்கண் என்னும் சிறைக்கோலால்⋆
நெஞ்சூடுருவ வேவுண்டு⋆
நிலையும் தளர்ந்து நைவேனை⋆
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன்⋆
அவன் மார்வணிந்த வனமாலை⋆
வஞ்சியாதே தருமாகில்⋆
மார்வில் கொணர்ந்து புரட்டீரே (3)

ஆரே உலகத்தாற்றுவார்⋆
    ஆயர் பாடி கவர்ந்துண்ணும்⋆
காரேறுழக்க உழக்குண்டு⋆
    தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை⋆
ஆராவமுதம் அனையான் தன்⋆
    அமுத வாயில் ஊறிய⋆
நீர் தான் கொணர்ந்து புலராமே⋆
    பருக்கி இளைப்பை நீக்கிரே (4)

அழிலும் தொழிலும் உருக் காட்டான்⋆
    அஞ்சேல் என்னான் அவன் ஒருவன்⋆
தழுவி முழுசிப் புகுந்தென்னை⋆
    சுற்றிச் சுழன்று போகானால்⋆
தழையின் பொழில்வாய் நிரைப் பின்னே⋆
    நெடுமால் ஊதி வருகின்ற⋆
குழலின் தொளைவாய் நீர் கொன்டு⋆
    குளிர முகத்துத் தடவீரே (5)

நடை ஒன்றில்லா உலகத்து⋆
    நந்தகோபன் மகன் என்னும்⋆
கொடிய கடிய திருமாலால்⋆
    குளப்புக் கூறு கொளப்பட்டு⋆
புடையும் பெயரகில்லேன் நான்⋆
    போட்கன் மிதித்த அடிப்பாட்டில்⋆
பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள்⋆
    போகா உயிர் என் உடம்பையே (6)

வெற்றிக் கருளக் கொடியான் தன்⋆
    மீமீதாடா உலகத்து⋆
வெற்ற வெறிதே பெற்ற தாய்⋆
    வேம்பே ஆக வளர்த்தாளே⋆
குற்றம் அற்ற முலை தன்னைக்⋆
    குமரன் கோலப் பணைத்தோளோடு⋆

அற்ற குற்றம் அவை தீர⋆
  அணைய அமுக்கிக் கட்டீரே (7)

உள்ளே உருகி நைவேனை⋆
  உளளோ இலளோ என்னாத⋆
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்⋆
  கோவர்த்தனனைக் கண்டக்கால்⋆
கொள்ளும் பயன் ஒன்றில்லாத⋆
  கொங்கை தன்னைக் கிழங்கோடும்⋆
அள்ளிப் பறித்திட்டவன் மார்வில்⋆
  எறிந்தென் அழலை தீர்வேனே (8)

கொம்மை முலைகள் இடர் தீர⋆
  கோவிந்தற்கோர் குற்றேவல்⋆
இம்மைப் பிறவி செய்யாதே⋆
  இனிப் போய்ச் செய்யும் தவந்தான் என்⋆
செம்மை உடைய திருமார்வில்⋆
  சேர்த்தானேனும் ஒரு ஞான்று⋆
மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி⋆
  விடைதான் தருமேல் மிக நன்றே (9)

‡அல்லல் விளைத்த பெருமானை⋆
  ஆயர் பாடிக்கணி விளக்கை⋆
வில்லி புதுவை நகர் நம்பி⋆
  விட்டுசித்தன் வியன் கோதை⋆
வில்லைத் தொலைத்த புருவத்தாள்⋆
  வேட்கை உற்றுமிக விரும்பும்⋆
சொல்லைத் துதிக்க வல்லார்கள்⋆
  துன்பக் கடலுள் துவளாரே (10)

‖ ஆண்டாள் திருவடிகளே சரணம் ‖

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ பட்டி மேய்ந்து ‖

## விருந்தாவனத்தே பரந்தாமனைக் கண்டமை

‡பட்டி மேய்ந்தோர் காரேறு⋆ பல தேவற்கோர் கீழ்க் கன்றாய்⋆
இட்டீறிட்டு விளையாடி⋆ இங்கே போதக் கண்டீரே⋆
இட்ட மான பசுக்களை⋆ இனிது மறித்து நீர் ஊட்டி⋆
விட்டுக் கொண்டு விளையாட⋆ விருந்தா வனத்தே கண்டோமே (1)

அனுங்க என்னைப் பிரிவு செய்து⋆ ஆயர் பாடி கவர்ந்துண்ணும்⋆
குனுங்கு நாறிக் குட்டேற்றைக்⋆ கோவர்த்தனனைக் கண்டீரே⋆
கணங்களோடு மின் மேகம்⋆ கலந்தாற் போல் வனமாலை⋆
மினுங்க நின்று விளையாட⋆ விருந்தா வனத்தே கண்டோமே (2)

மாலாய்ப் பிறந்த நம்பியை⋆ மாலே செய்யும் மணாளனை⋆
ஏலாப் பொய்கள் உரைப்பானை⋆ இங்கே போதக் கண்டீரே⋆
மேலால் பரந்த வெயில் காப்பான்⋆ வினதை சிறுவன் சிறகென்னும்⋆
மேலாப்பின் கீழ் வருவானை⋆ விருந்தா வனத்தே கண்டோமே (3)

கார்த் தண் கமலக் கண் என்னும்⋆ நெடுங்கயிறு படுத்தி⋆ என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும்⋆ ஈசன் தன்னைக் கண்டீரே⋆
போர்த்த முத்தின் குப்பாய⋆ புகர் மால் யானைக் கன்றே போல்⋆
வேர்த்து நின்று விளையாட⋆ விருந்தா வனத்தே கண்டோமே (4)

‡மாதவன் என் மணியினை⋆ வலையில் பிழைத்த பன்றி போல்⋆
ஏதும் ஒன்றும் கொளத் தாரா⋆ ஈசன் தன்னைக் கண்டீரே⋆
பீதக ஆடை உடை தாழ⋆ பெருங்கார்மேகக் கன்றே போல்⋆
வீதி ஆர வருவானை⋆ விருந்தா வனத்தே கண்டோமே (5)

தருமம் அறியாக் குறும்பனை⋆ தன் கைச் சார்ங்கம் அதுவே போல்⋆
புருவ வட்டம் அழகிய⋆ பொருத்தம் இலியைக் கண்டீரே⋆
உருவு கரிதாய் முகம் செய்தாய்⋆ உதயப் பருப்பதத்தின் மேல்⋆
விரியும் கதிரே போல் வானை⋆ விருந்தா வனத்தே கண்டோமே (6)

பொருத்தம் உடைய நம்பியைப்⋆
புறம் போல் உள்ளும் கரியானைக்⋆
கருத்தைப் பிழைத்து நின்ற⋆
அக்கரு மா முகிலைக் கண்டீரே⋆
அருத்தித் தாரா கணங்களால்⋆
ஆரப் பெருகு வானம் போல்⋆
விருத்தம் பெரிதாய் வருவானை⋆
விருந்தா வனத்தே கண்டோமே (7)

வெளிய சங்கொன்றுடையானைப்⋆
பீதக ஆடை உடையானை⋆
அளி நன்குடைய திருமாலை⋆
ஆழியானைக் கண்டீரே⋆
களிவண்டெங்கும் கலந்தாற் போல்⋆
கமழ் பூங்குழல்கள் தடந்தோள் மேல்⋆
மிளிர நின்று விளையாட⋆
விருந்தா வனத்தே கண்டோமே (8)

‡நாட்டைப் படை என்றயன் முதலாத்தந்த⋆ நளிர் மாமலர் உந்தி⋆
வீட்டைப் பண்ணி விளையாடும்⋆ விமலன் தன்னைக் கண்டீரே⋆
காட்டை நாடித் தேனுகனும்⋆ களிறும் புள்ளும் உடன் மடிய⋆
வேட்டை ஆடி வருவானை⋆ விருந்தா வனத்தே கண்டோமே (9)

‡பருந்தாள் களிற்றுக்கருள் செய்த⋆
பரமன் தன்னைப்⋆ பாரின்மேல்
விருந்தா வனத்தே கண்டமை⋆
விட்டுசித்தன் கோதை சொல்⋆
மருந்தாம் என்று தம் மனத்தே⋆
வைத்துக் கொண்டு வாழ்வார்கள்⋆
பெருந்தாள் உடைய பிரான் அடிக்கீழ்⋆
பிரியாதென்றும் இருப்பாரே (10)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥